1987 நவம்பர் 18]

ஐந்தாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

அறிக்கையை அச்சிட்டு வழங்குவதற்கு தேவையான அவகாசமம் இல்லாத காரணத்தால் ஐந்து நகல்கள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப் பெற்றுள்ளன. அறிக்கை அச்சிடப்பெற்ற பின்னால் அச்சிடப் பெற்ற பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப் படும்.

(ஈ) மனுக்கள் குழு.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுக்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

(i) நான்காவது அறிக்கை;

(ii) ஐந்தாவது அறிக்கை.

(உ) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் கீழ்காணும் அறிக்கையை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

நான்காவது அறிக்கை.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

---

* 16—11—1987 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.